


Our Chezhumai is given to the Small Groups in bilingual format (English and Tamil)

எங்களது செழுமை மாத இதழ் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் சிறுகுழுக்களுக்கு கொடுக்கப்படுகிறது



Wipro employees enjoying planting in TIST Progrfam

**Few Best Practices**

1. Give good spacing between trees to have good growth
2. Attend all the Node meetings with out fail
3. Plant trees for short &long time income and also plant good timber & fruit bearing trees
4. Prepare seedlings with minimum cost in your own land
5. Practice intercrops regularly
6. Place a name board for every grove
7. Record all the activities of Node in your log note
8. Do all the activities after good planing and with full zeal

## சிறந்த பயிற்சி முறைகள்

1. மரங்கள் நல்ல முறையில் வளர்வதற்கு, மரங்களை நல்ல இடைவெளி விட்டு நடவு செய்வது
2. கணுகூட்டங்களில் தவறாமல் கலந்து கொள்வது
3. குறுகிய காலம் மற்றும் நீண்ட காலத்திற்கான வருமானம் பெற பலவிதமான மரங்கள், பழவகைகள் மற்றும் கட்டடதச்சு வேலைக்கான மரங்களை நடவு செய்வது
4. மரக்கன்றுகளை குறைந்த செலவில் அவரவர் தோப்புகளிலேயே தயரிப்ப
5. தவறாமல் ஊடுபயிர் செய்வது
6. தோப்புகளுக்கு பெயர் பலகை பொருத்துவ
7. சிறுகுழுக்கள் கூட்டத்தில் பேசப்பட்ட நல்ல செயல்முறைகளை பதிவேடு புத்தகத்தில் பதிவு செய்வது.
8. ஏல்லா காரியத்தையும் நல்ல திட்டமிட்டு ஆர்வத்தோடு செய்வது

## Few points to be taken care during Node meeting

1. SGMR forms should be filled in before coming to the Node meeting
2. There should be atleast one women from every small group for the Node meeting
3. Members should come forward to learn the SGMR entering procedure in the palm
4. Node meeting should not begin without a prayer
5. Every small group should try to bring one article pertaining to TIST program, it can be on tree planting, conservative farming, health issue, improvement in sustainable development, etc.

## நோடு கூட்டங்களில் கவனிக்கூடிய சில விவரங்கள்

1. எஸ்ஜிஎம்ஆர் படிவங்கள் அடுத்த "நோடு" கூட்டத்திற்குள் பூர்த்தி செய்யப்படவேண்டும்.
2. ஒவ்வொரு சிறு குழுக்களிவிருந்த ஒரு பெண் அங்கித்தினர் கட்டாயமாக கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும்.
3. எஸ்ஜிஎம்ஆர் பதிவு முறைகளை கற்று கொள்வதில் அங்கத்தினர்கள் முன்வர வேண்டும்.
4. ஒவ்வொரு 'நோடு' கூட்டமும் இறைவழிப்பாட்டுடன் தான் தொடங்க வேண்டும்.
5. ஒவ்வொரு சிறு குழுவும் டிஐஎஸ்டி நிகழ்வுடன் தொடர்பான ஏதாவது ஒரு செய்தி தொகுப்பை கொண்டுவர முயற்சிக்க வேண்டும். மரம் வளர்த்தல், உடல் ஆரோக்கியம், முன்னேற்று வழிகள், பண்ணை வளர்ப்பு போன்ற ஏதாவது ஒன்றைப்பற்றிய செய்தியை கொண்டு வரலாம்.



Node Meeting, Villupuram District / நோடு கூட்டம், விழுப்புரம் மாவட்டம்

## Avoid monoculture, have multiple species with good spacing

TIST is not here to encourage one single kind of tree. TIST is encouraging the Small Groups to do reforestation/aforestation. A forest means lot of trees and different types of trees, not just single kind of trees. Now you may wonder that in a forest trees and plants are very tightly grown, but why TIST does not allow you to plant trees with less spacing. The reason for having good spacing between each tree is to allow the tree to grow to good height. For example, if a mango tree is planted with good spacing, the mango tree grows atleast 10 m in height with 4-5 m long side branches. This full-grown mango tree may sequester the carbon produced by one lorry per day. Suppose the spacing for the mango trees are very minimum, then the tree will grow not 10 m height and the side branches will not reach 4-5 m, automatically the carbon sequester by this tree will fall down. TIST is facilitating to have continuous funding for the Small Group Voucher payment through revenue from the carbon credits market. If the trees grown by you does not attain its normal height then how do we sequester the carbon and how do we market the carbon credits. Grow multiple species of trees and give enough spacing between each tree and enjoy the benefits from TIST.

## ஓர் இன பயிர் செய்யும் முறையை கைவிடுதல் – நன்றாக இடைவெளிவிட்டு பலவகை இன பயிர் செய்யும் முறையை கடைபிடித்தல்

டிஐஎஸ்டி ஓர் இன மரங்கள் நிறைந்த தோப்புகள் உருவாக்குதலை ஊக்குவிப்பதில்லை. டிஐஎஸ்டி சிறு குழுக்களை காடுகள் வளர்பதிலும் சீரமைப்பதிலும் ஆர்வம் செலுத்துதலையே ஊக்குவிக்கிறது. ஒரு காடு என்றால் நிறைய மரங்கள், வெவ்வேறு வகையான மரங்கள் கொண்டிருக்க வேண்டுமே தவிர ஒரே வகையான மரங்கள் கொண்டிருக்கக்கூடாது. காடுகள் என்றால் அடர்த்தியாக வளர்ந்த மரங்கள் நிறைந்த இடம் என்பதாகும் ஆனால் டிஐஎஸ்டியோ மரங்களுக்கு இடையே போதுமான இடைவெளியிருக்க வேண்டும் என்று கூறுகிறதே என்று நீங்கள் திகைக்கலாம். இடைவெளி வேண்டும் என்பதை வலியுறுத்த காரணம் மரங்கள் நன்றாக உயரமாக வளரவேண்டும் என்பதே ஆகும். உதாரணமாக மாமரங்களுக்கிடையே நன்றாக இடைவெளியிருந்தால் ஒவ்வொரு மாமரமும் 10மீ உயரம், 4–5 மீ பக்க கிளைகளுடன் காணப்படும் இவ்வாறாக முழுமையாக வளர்ச்சியடைந்த மாமரமானது ஒரு நாளைக்கு உதாரணமாக ஒரு லாரியின் மூலம் ஏற்படும் அசுத்தமான காற்றை சுத்தம் செய்ய தேவையான கார்பன் பெற உதவும். ஆனால் இடைவெளி மிக குறைவாக இருந்தால் மாமரங்கள் 10 மீ உயரம், 4–5 மீ பக்க கிளைகள் கொண்டிருக்காமல் முழுவளர்ச்சி–யடையாமல் இருக்கும். இதனால் கார்பன் கிரிட்டு உற்பத்தியும் குறையும். டிஐஎஸ்டி கார்பன் கிரிடுட்டுகள் மூலம் வவுச்சர் பேமெண்ட் பெறும் முறையை வலியுறுத்தி கொண்டேயிருக்கிறது உங்களின் மரங்கள் போதுமான வளர்சியடையவில்லை என்றால் உங்களின் கார்பன் கிரிடிட்டுகளை எவ்வாறு விற்பனை செய்ய இயலும். டிஐஎஸ்டியின் முழுபலன் பெற பல இன வகை மரங்களை போதுமான இடைவெளியுடன் பயிர் செய்து பலன் அடையுங்கள்.



Teak trees planted with good spacing, Villupuram District / நல்ல இடைவெளி விட்டு நடவு செய்த தேக்கு மரங்கள், **விழுப்புரம் மாவட்டம்**

## Three good techniques from the Small Groups

**a.** What is the best way to arrange people during a small group meeting?

**Answer**: small circle is the best - avoid using tables because they create barriers between people.

**b.** What do you do if more than twelve people want to join your group?

**Answer**: If there are more than twelve people interested in joining your group it is best to form a new group. The group can split in two; or three or four members of the original group can form the core of the new group. This is better than one member trying to start a group alone. Remember to start using rotating leadership straight away.

**c.** What techniques can you use if the group members are tired?

**Answer**: Split up the group into pairs and get each pair to talk about the task. Dramas also help. Sometimes stopping and each person saying something good that their group is doing can also motivate people again.

## சிறு குழுக்களின் மூன்று சிறந்த தொழில் நுணுக்கங்கள்

**a.** சிறு குழுக்களின் கூட்டத்திற்கு வரும் மக்களை ஒழுங்குப்படுத்த சிறந்த வழி எது ?

**பதில்:** சிறிய வட்ட அமைப்பில் அமருவதே சிறந்தது. மேஜைகளை தவிர்க்கவும் கராணம் மக்களுக்கிடையே அவை தடைகளாக இருக்கும்.

**b.** 12 பேர்களுக்கு மேல் உங்கள் குழுவில் சேர விரும்பினால் நீங்கள் என்ன செய்வீர்கள் ?

**பதில்:** 12 பேர்களுக்கு மேல் இருப்பின் புதிய குழுவை அழைப்பதே சிறந்தது. ஏற்கனவே உள்ள குழு அங்கத்தினர் 2 அல்லது 3 அல்லது 4 ஆக பிரிந்து புதிய குழுவின் மைய அங்கத்தினர்களாக இருந்தது செயல்படலாம். ஒருவர் மட்டும் ஒரு குழுவை அமைக்க முயலுவதற்கு பதிலாக மேற்கூறிய வகையில் செயல்படுவதே நல்லது. பழைய அங்கத்தினர் சுழற்சி முறையில் தலைமையேற்று செயல்படவேண்டும்.

**c.** குழு அங்கத்தினர் சோர்வு அடைந்தால் எந்த வகை நுணுக்கங்களை பயன்படுத்துவீர்கள் ?

**பதில்:** குழுவில் உள்ளவர்களை இருவர் இருவராக பிரித்து தங்கள் செயலாக்கங்களைப்பற்றி பேசவைக்க வேண்டும். நாடக முறையும் உதவியாக இருக்கும். ஒவ்வொருவரும் தங்கள் ழுவினர் கடைபிடிக்கும் சில நல்ல நுணுக்கங்களை பற்றி சொல்லி மற்றவர்களை ஊக்குவிக்கலாம்.



## Form Pond

Farm pond is yet other important activity for the areas where there is less rainfall. Planned ridges & furrows will accumulate rain water in one corner of your form pond. For one hectare, the dimensions of the farm pond should be 40 x 10 x 1.5 m. It can hold 600 m3 of rainwater when it is full. Water in the farm pond will be there for 30 to 40 days after last rain and can be utilized for pot watering twice using family labour to the trees. This pond, will not only hold, run off water but also act as silt setting pool and thus could retain 4 to 6 of eroded, nutrient enriched top soil of the land every year. The settled silt in the pond after drying can be removed and applied to the tree species as a source of organic nutrient. If the seasonal rainfall of the tract is wide spread, and if the stagnation of water in the pond is going to be more than 31/2 to 4 months, "kelithi or gendai", a local fish can also be reared in the farm pond. If it is your own land, it will be your own. This would yield 30 to 40 kg of fish meat at the time of drying of the pond. An extra income of Rs.750 to 1,000 can be achieved through the sale of fish.

## பண்ணை குளம்

குறைந்த அளவு மழை பெய்யும் இடங்களில் பண்ணை குளம் அமைத்தல் முக்கியமானதாகும். வயல்களில் நன்றாக திட்டமிட்ட வரப்புகளும், உழுவுகால்களும் அமைக்க வேண்டும். இவ்வாறு செய்தால் நிலத்தின் ஒரு மூலையில் மழை நீர் குளமாக தேங்கியிருக்கும். ஒரு எக்டாருக்கு பண்ணை குளத்தின் அளவு 40-10-1.5 மீ இருக்க வேண்டும். நிறைந்த நிலையில் இக்குளம் $600m^3$ அளவு மழை நீரை தேக்கும் தன்மையுடையது. 30 லிருந்து 40 நாட்கள் வரை தேவையான நீரை தேக்கிவைத்துக்கொண்டு பயன்ப–டுத்தலாம். ஒரு நாளைக்கு இரு முறை மரங்களுக்கு நீர் பாய்ச்சலாம். இக்குளம் வழிந்தோடும் நீரை மற்றுமில்லாமல் வண்டல் தேங்கும் குட்டையாகவும் பயன்படும் இதனால் வருடத்திற்கு மண்ணும் 4-6 வரை வளமிகுந்க நிலையை உள்ளடக்கியிருக்கும். இந்த வண்டல் மண்ணை காய வைத்து, பின் மரங்களுக்கு உரமிடலாம், அதிக மழை உள்ள காலத்தில் குளம் நிறைந்து $3^{1/2}$ லிருந்து 4 மாதம் உபயோக முள்ள நீரை கொண்டிருந்தால், கெளித்தி மற்றும் கெண்டை மீன்களை வளர்க்கலாம். உங்கள் சொந்த நிலமாக இருந்தால், இது உங்களுடையதே. குளம் வற்றும் நிலையில் 30-40 கிலோ மீன் கிடைக்கும். ரு 750 முதல் ரு 1000 வரை மீன்கள் விற்று கூடுதல் வருவாய் கிடைக்கலாம்.

Are you ready with your seedlings for transplanting? Its raining, make use of the rain effectively
துங்கள் நாற்றுக்கண்களுடன் தாங்கள் தயாராக உள்ளீர்களா ? மழைக்காலத்தை நன்றாக பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

## Women members where are you?

TIST does not see any women members during the Node meetings or even during quantification. It is a known fact that women members are very active in planting trees - like cleaning the field and removing the weeds, plaughing, planting, watering, etc. When you all can do all these tough job, why should not you all attend the Node meetings and know what is happening in the Node meeting. The women members in TIST Kenya have taken few forward steps and started to attend the Node meetings and other activities. TIST India is looking forward the same activities from the women members of TIST India too.

## பெண் அங்கத்தினரே–நீங்கள் எங்கே ?

டிஐஎஸ்டி நோடு கூட்டங்க–ளிலும் ஆய்வு சமயங்களிலும் பெண் அங்கத்தினர்களை பார்பதே இல்லை. மரங்கள் நடுவது நிலங்களை சுத்தப்படுத்துவது களைகளை அகற்றுவது உழுதல் தண்ணீர் பாய்சசுதல் போன்ற வேலை–களை பெண் உறுப்பினர்களே மிக சிறப்பாக செய்து வருகின்றனர். இது போன்ற கடினமான வேலைகளை செய்யக்கூடிய இவர்கள் ஏன் நோடு கூட்டங்களில் கலந்து கொண்டு அதன் விவரங்களை தெரிந்து கொள்ளக்கூடாது என்ற கேள்வி எழும்புகிறது. டீஐஎஸ்டி கெண்யாவில் பெண்கள் சிலர் நோடு கூட்டங்களில் கலந்து கொள்ள ஆரம்பித்து உள்ளனர். டிஐஎஸ்டி இந்தியா இதே போன்று இந்திய பெண் உறுப்பினர்களும் முன் வந்து செயல்படவேண்டும் என்று எதிர்பார்க்கிறது.

## டிஜஎஸ்டி நிகழ்வில் பங்குகொள்ள அங்கத்தினர்கள் பூர்த்தி செய்ய வேண்டிய தகுதிகள்

1. ஒவ்வொரு சிறு குழுவிலும் குறைந்தது மூன்று வெவ்வேறு குடும்பங்களை சார்ந்த 6 முதல் 12 உறுப்பினர்கள் இருக்க வேண்டும்.
2. ஒவ்வொரு சிறு குழுவும் குறைந்தது 1,000 உயிர் மரங்களை, டிஜஎஸ்டியில் சேர்ந்த ஒரு வருடத்திற்குள் வளர்க்க வேண்டும்.
3. டிஜஎஸ்டியில் சேர்ந்து ஐந்து வருடங்களுக்குள் குறைந்தது 5,000 உயிர் மரங்களை கொண்டிருக்க வேண்டும்.
4. உங்கள் சிறு குழு ஒவ்வொரு வருடமும் 20, வருடங்களுக்கு அழிந்த அல்ல விழுந்தபோன மரங்களின் இடத்தில் புதிய மரங்களை வளர்க்க வேண்டும்.,
5. எல்லா சிறு குழுவும் கீரீன்ஹவுஸ் உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டும்.
6. டிஜஎஸ்டி ஒரு வருடத்திற்கு ஒரு உயிர் மரத்திற்கு ரூ.1.50 (US $0.03) கொடுக்கும் (கீரீன் ஹவுஸ் உடன்படிக்கையை படித்து மேலும் விவரங்களை தெரிந்து கொள்ளுங்கள்).
7. புதர்கள் அல்லது 4மீ உயரத்திற்கு குறைவாக வளரும் இனவகை மரங்களை டிஜஎஸ்டி மரமாக கணக்கில் எடுத்து கொள்ளாது.
8. 2மீஇடைவெளிக்கும் குறைவாக பயிரிடப்படும் மரங்கள் கணக்கில் எடுக்க இயலாது.
9. 10 வருடங்கள் அதற்கு மேல் வளர்ந்த மரங்களையே டிஜஎஸ்டி அறுவடை செய்ய அனுமதியளிக்கும். எனினும் ஒரு வருடத்திற்கு 5 சதவிகிதத்திற்கு மேலாக அறுவடை செய்ய கூடாது.
10. ஒவ்வொரு சிறு குழுவும் 33 சதவிகிதத்திற்கும் குறைவாகவே குறுகியகால மரங்கள் இருக்கவேண்டும். (உ.த. தைலமரம்) தற்பொழுதிய குழுக்கள் 33 சதவிகிதத்திற்கு மேல் குறுகியகால சுழற்சி முறை மரங்களை வளர்ப்பின் அவர்கள் 5 வருடம் (2012) வரை கூடுதலான மரங்களை வளர்க்க காலம் கொடுக்கப்படும். அல்லது இந்த தகுதியடையும் வரை மரங்களை அறுவடை செய்ய இயலாது.
11. டிஜஎஸ்டி சிறு குழுக்கள் ஆண்டிற்கு ஒரு முறை கட்டாயமாக ஆய்வாளர்களை அழைத்து தங்கள் தோப்பினை ஆய்வு செய்து கொள்ள வேண்டும். இவர்கள் மற்ற சிறு குழுவினரோடு சேர்ந்து ஆய்வின் பொழுது, ஆய்வாளர்களுக்கு உணவும், தங்கும் இடமும் ஏற்பாடு செய்ய வேண்டும்.
12. சிறு குழு அங்கத்தினர் ஒன்றாக கூடி தங்களின் பயிற்சி முறைகளையும். ஆலோசனைகளையும் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு வாரமும் சந்திக்க இயலாவிட்டால் மாதம் ஒரு முறையாவது சந்திக்க வேண்டும்.
13. சிறு குழு அங்கத்தினர் தாங்கள் மரங்களை வளர்க்கும் நிலத்தின் உரிமை சான்றினை அளிக்க வேண்டும்.
14. குழுவின் அங்கத்தினர்கள் டிஜஎஸ்டி பயிற்சியில் பங்கு கொண்டு மற்ற குழுக்களுடன் தங்களின் சிறப்பு பயிற்சி முறைகளை பகிர்ந்து கொள்ளவேண்டும்.
15. உங்கள் சிறு குழு உள்ள பகுதியில் மற்ற சிறு குழுக்களும் நடந்து செல்லும் தூரத்தில் அமைந்திருக்க வேண்டும். ஒரு வருடத்திற்குள் 100,000 மரங்களும் 5 வருடங்களுக்குள் 300,000 மரங்கள் வளர்க்ளும் தகுதியும் கொண்டிருக்க வேண்டும்.